# உயிருடன் இருப்பவர்கள் சிறுநீரக தானம் செய்வது

## What is livingkidney donation?

## உயிருடன் இருப்பவர்கள் சிறுநீரக தானம் செய்வது என்றால் என்ன?

நம்மில் அநேகர் இரு சிறுநீரகங்களுடன் பிறக்கின்றோம். இருப்பினும், ஆரோக்கியமான ஒருவர், சாதாரண ஆரோக்கியமானதொரு வாழ்க்கையை ஒரு சிறுநீரகத்துடனேயே வாழ முடியும். அதாவது ஆரோக்கியமான நபர், சிறுநீரகங்கள் செயல்படாத யாராவது ஒருவருக்கு ஒரு சிறுநீரகத்தினை (தானம்) கொடுக்கலாம் என்பதை இது குறிக்கின்றது. இந்தப்பரிசு தான் **உயிருடன் இருப்பவர்கள்** சிறுநீரக தானம் செய்வது எனப்படும். சிறுநீரகம் தேவைப்படும் ஒருவருக்கு தன் சிறுநீரகத்தை தானமாகக் கொடுக்கும் ஒரு நபர் '**உயிருடன் இருக்கும் சிறுநீரக தானம் செய்பவர்**' எனப்படுகின்றார். சிறுநீரகம் தேவைப்படும் நபர் 'உறுப்பு மாற்றுப் பெறுநர்' என அழைக்கப்படுகின்றார்.

நல்லாரோக்கியத்துடன் இருக்கும் வளர்ந்த நபர் எவரையும் **உயிருடன் இருக்கும் சிறுநீரக தானம் செய்பவராக** மதிப்பீடு செய்யலாம். சிறுநீரகம் தேவைப்படும் ஒருவருக்கு தானம் செய்பவர் போதியளவு ஆரோக்கியமாக இருப்பதை உறுதிசெய்வதற்காக ஒவ்வொரு சாத்தியமுள்ள தானம் செய்பவரும் ஒரு முழுமையான மருத்துவ பரிசோதனையைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

சிறுநீரக தானம் என்ற செயல்முறையானது தானம் செய்பவரது சிறுநீரகத்தை அகற்றும் ஒரு சத்திரசிகிச்சையையும் உறுப்புமாற்றுப் பெறுநரினுள்ளே அதை பொருத்தும்
இன்னொரு சத்திரசிகிச்சையையும் உள்ளடக்கும். தானம் செய்த பின், தானம் செய்பவரின்மீதமாயுள்ள சிறுநீரகம் அகற்றப்பட்ட சிறுநீரகத்தின் செயற்பாட்டினை ஈடுசெய்வதற்காக மேலும் கடினமாக வேலைசெய்ய ஆரம்பிக்கின்றது. மீதமுள்ள சிறுநீரகம் தொடர்ந்தும் சரியாகத் செயல்படுகின்றதை உறுதிப்படுத்தத் தானம் செய்பவர்மருத்துவருடன் ஒரு பரிசோதனையை ஒவ்வொரு வருடமும் செய்து கொள்ள வேண்டும்.

## சில நோயாளிகளுக்கு ஏன் சிறுநீரக மாற்றுசிகிச்சை தேவைப்படுகின்றது?

சிறுநீரகங்கள் நமது இரத்தத்திலுள்ள கழிவுகளை அகற்றுகின்றன. நமது உடல்களிலே உப்பு மற்றும் திரவத்தின் அளவுகளையும் அவை கட்டுப்படுத்துகின்றன. சிலவேளைகளில் உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு போன்ற ஒரு சுகயீனம் அல்லது நோய், சிறுநீரகங்களைச் செயலிழக்கப்பண்ணுகின்றன. இது நடைபெறும்போது சிறுநீரகங்கள் சரியாக செயல்படும் தமது திறனை இழக்கும் நிலையை நெருங்கிவிட்டதால், 'இறுதி-நிலை சிறுநீரக நோய்' என்று இதனை அழைப்பர். சிறுநீரகங்கள் செயற்படுவது நின்ற உடன் இரத்தத்திலிருந்து கழிவுகளை அகற்ற அந்த நோயாளிக்கு ஏதாவது ஒரு சிகிச்சை தேவைப்படுகின்றது. சிறுநீரக மாற்றுச் சிகிச்சை ஒரு தெரிவாகும். இந்த சிறுநீரகம் ஒரு உயிருள்ள ஆரோக்கியமான தானம் செய்யும் ஒருவரிடமிருந்து அல்லது அண்மையில் இறந்த ஒருவரிடம் இருந்து (இறந்தபிறகு தானம் செய்பவர்) கிடைக்கலாம். டயாலிசிஸ் என்ற குருதிச் சுத்திகரிப்பு என்பது இன்னொரு தெரிவாகும். இக்குருதிச் சுத்திகரிப்பில் ஒரு இயந்திரம் குருதியிலிருந்து கழிவுகளை அகற்றப் பயன்படுத்தப்படுகின்றது. தகைமை பெற்றவர்களுக்கு, உயிருடன் இருப்பவரிடமிருந்து பெறும் உறுப்பு மாற்றுத்தான் மிகச் சிறந்த தெரிவாகும்.

## உயிருடன் இருப்பவர்கள் செய்யும் சிறுநீரக தானத்திலுள்ள அனுகூலங்கள் யாவை?

- இறுதி-நிலை சிறுநீரக நோய் உள்ள நோயாளிகளுக்கும் அவர்கள் சிறுநீரக மாற்றுசிகிச்சைக்குத் தகைமை உடையவர்களாயுமிருந்தால், உயிருடன் இருக்கும் தானம் செய்பவரிடமிருந்து பெறப்படும் சிறுநீரகமே மிகச்சிறந்த சிகிச்சையாகும்.

- உயிருடன் இருக்கும் தானம் செய்பவரிடமிருந்துபெற்றப்பட்ட சிறுநீரகம் இறந்தவரிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரகத்தைவிட பொதுவாக மேலும் நீண்டகாலம் நிலைத்திருக்கின்றது.

- உயிருடன் இருக்கும் தானம் செய்பவரிடமிருந்து பெறப்பட்ட சிறுநீரகம் நோயாளிக்கு டயாலிசிஸ் குருதிச் சுத்திகரிப்பிற்கான தேவையைக் குறைக்கின்றது அல்லது அதன் தேவையைத் தடுக்கவும் செய்யக்கூடும்.

- உயிருடன் இருக்கும் தானம் செய்பவரிடமிருந்து சிறுநீரகத்தை பெற்றுக்கொண்ட ஒரு நோயாளி இறந்தவரிடமிருந்து சிறுநீரக மாற்றினைப் பெறக் காத்திருப்போர் பட்டியலிலிருந்து அகற்றப்படுகின்றார். இது ஏனைய நோயாளிகளுக்கு உறுப்புமாற்றுக் காத்திருப்புப் பட்டியல்களில் உள்ள காத்திருப்பு நேரத்தைக் குறைத்துவிடுகின்றது.

- சாத்தியமுள்ள தானம் செய்பவர் மற்றும் உறுப்புமாற்றுப் பெறுநர்- இருவரும் மிக உன்னதமான ஆரோக்கிய நிலையில் இருக்கும் வேளையில் தானம் செய்வது மற்றும் உறுப்புமாற்று சத்திர சிகிச்சைகளைச் செய்வதற்குத் திட்டமிட வேண்டும். நல்லாரோக்கியத்துடன் இருப்பது என்பது சத்திரசிகிச்சையின் பின்னரான குணப்படுதலை மேம்படுத்துகின்றது.

- சிறுநீரக தானம் செய்த பலரும் சிறுநீரகத் தேவைகொண்ட ஒருவருக்கு உதவுவது நல்ல நேர்மறையான தனிப்பட்டதொரு அனுபவமாகும் என்று கூறுகின்றனர்.

**ஒரு சிறுநீரகத்தை யார் வேண்டுமானாலும் தானம் செய்ய முடியுமா?**

ஆரோக்கியமான வளர்ந்தவர் யாரை வேண்டுமானாலும் உயிருடன் இருக்கும் தானம் செய்பவர் எனக் கருத்தில் கொள்ள முடியும். சாத்தியமுள்ள ஒரு தானம் செய்பவர் உறுப்புமாற்றுப் பெறுநரின் குடும்ப உறுப்பினராக, நண்பராக, அயல்வீட்டினராக அல்லது அவருக்கு அறிமுகமான ஒருவராகவோ இருக்கலாம். சாத்தியமுள்ள ஒரு தானம் செய்பவர் உறுப்புமாற்றுப் பெறுநருடைய வயதினராகவோ பாலினமாகவோ இனத்தவராகவோ இருக்க வேண்டும் என்பதில்லை. உண்மையில், தானம் செய்ய விரும்பும் யாராகவேனும் இருக்கலாம்.

தானம் செய்தல் மற்றும் உறுப்புமாற்று என்பன நடைபெறும் முன்னர் சாத்தியமுள்ள தானம் செய்பவர் மற்றும் உறுப்புமாற்றுப் பெறுநர் இருவரும் கட்டாயமாக மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மதிப்பீடுகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். உதாரணமாக, சாத்தியமுள்ள தானம் செய்பவர் சத்திரசிகிச்சையைச் செய்து கொள்ளுமளவிற்கும் அதன்பின்னர் ஒரு சிறுநீரகத்துடன் ஆரோக்கியமாக வாழுமளவிற்கும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். அதேபோல் உறுப்புமாற்றுப் பெறுநர் இறுதி-நிலை சிறுநீரக நோய் கொண்டும் ஒரு புதிய சிறுநீரகம் தேவைப்படுபவராகவும் இருந்தாலும், இந்த நபர், சத்திரசிகிச்சையை ஏற்குமளவிற்கு ஆரோக்கியமாக இருப்பதுடன் பிறகு செய்யப்படும் நிராகரிப்பு எதிர்ப்பு சிகிச்சையினைத் தாங்கக்கூடியளவிற்கும் இருக்க வேண்டும். விசேட இரத்தப் பரிசோதனைகள் தானம் செய்பவர் மற்றும் உறுப்புமாற்றுப் பெறுநர் இருவரின் இரத்தம் மற்றும் இழையங்கள் பொருந்துகின்றனவா எனப் பார்ப்பதற்காகச் செய்யப்படுகின்றன. இந்தக் காரணிகள் பொருந்தினால் சாத்தியமுள்ள தானம் செய்பவரும் உறுப்புமாற்றுப் பெறுநரும் ஒரு பொருந்தும் இணையர் என அழைக்கப்பட்டு உறுப்புமாற்றுப் பெறுநர் ஒரு சிறுநீரகத்தை இந்த தானம் செய்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். இந்த மருத்துவப் பரிசோதனைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் பகல்நேர மருத்துவ நேர் சந்திப்புகள் தேவைப்படும்.

தானம் செய்த பின்னர், தானம் செய்தவர் நல்லாரோக்கியத்துடன் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. நல்லாரோக்கியத்துடன் இருப்பது என்பது ஒழுங்குமுறையிலான மருத்துவ பரிசோதனைகள் செய்து கொள்வது மற்றும் அவர்களது குடும்ப மருத்துவரிடம் இருந்து ஆரோக்கியப் பராமரிப்பினைப் பெற்றுக்கொள்வது என்பவற்றை உள்ளடக்கும்.

**சாத்தியமுள்ள தானம் செய்பவரின் சிறுநீரகம் உறுப்புமாற்றுப் பெறுநருக்கு பொருந்தவில்லை என்றால் என்ன நடக்கும்?**

சாத்தியமுள்ள தானம் செய்பவரின் சிறுநீரகம் உறுப்புமாற்றுப் பெறுநருக்கு பொருந்தவில்லை என்று இரத்தப்பரிசோதனைகள் காட்டினால் அவர்கள் 'பொருந்தா(த) இணையர்' என்றழைக்கப்படுவர். தானம் செய்பவரின் குருதி வகையும் உறுப்பு மாற்றுப் பெறுநருடைய குருதி வகையும் பொருத்தமற்றிருப்பின் இது நடைபெறலாம். அல்லது, இது உறுப்புமாற்றுப் பெறுநரின் குருதியில் தானம் செய்பவரின் சிறுநீரகத்தை நிராகரித்துவிடக்கூடிய 'அன்ரிபொடீஸ்' என்ற உடலரு எதிரிப் புரதங்களைக் கொண்டுள்ளதை குறிக்கக்கூடும். சாத்தியமுள்ள தானம் செய்பவரின் சிறுநீரகம் உறுப்புமாற்றுப் பெறுநருக்கு பொருந்தவில்லைஎன்றாலும்,

பொருந்தக்கூடிய சிறுநீரக தானத் திட்டத்தின் மூலம் அவர்கள் ஒரு பொருத்தமான சிறுநீரகத்தை உறுப்புமாற்றுப் பெறுநருக்குப் பெற்றுத்தர மேலும் முயற்சிக்க முடியும். இந்தத் திட்டம் சிறுநீரக தானம் செய்பவர்களை சிறுநீரகம் தேவைப்படும் உறுப்புமாற்றுப் பெறுநர்களுடன் பொருத்த முயற்சிக்கின்றது. மேலதிக தகவல்களுக்கு உங்களது உயிருடன் இருப்பவர்கள் சிறுநீரக தானம் செய்தல் திட்டத்தினை அல்லது உறுப்புமாற்று நிலையத்தினைக் கேளுங்கள் அல்லது blood.ca/organs-tissues -க்குச் சென்று பாருங்கள்.

## உயிருடன் இருப்பவர்கள் செய்யும் தானத்தின் வகைகள்

**குறிப்பாக வழிப்படுத்திய தானம்:** சாத்தியமுள்ள தானம் செய்பவருக்கு உறுப்புமாற்றுப் பெறுநரைத் தெரிந்திருக்கும்போது இந்த வகைத்தானம் நடைபெறுகின்றது. குறிப்பாக வழிப்படுத்திய தானதாரி உறுப்புமாற்றுப் பெறுநருக்கு உயிரியல் இரத்த உறவு ரீதியாகத் தொடர்புடையவராக இருக்கலாம் (உதாரணமாகப் பெற்றோர், பிள்ளைகள், சகோதர சகோதரிகள், பாட்டன் பாட்டியர் அல்லது இவ்வாறான தொடர்பு அற்றவராக (உதாரணம்: துணைவர், நண்பர், ஒன்றாக – வேலை புரிபவர்) இருக்கலாம்.

**குறிப்பாக வழிப்படுத்தப்ப்டாத அநாமதேயமான தானம் ((NDAD):**

ஒருவர் சிறுநீரகத்தை தானம் செய்ய முன்வரும்போது, அது தேவைப்படும் யாரோ ஒருவருக்கு பொருந்தும் போது இந்த வகையான தானம் நடைபெறுகின்றது. இதுபோன்ற தானம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள ஒருவருக்குக் கொடுக்கப்படும் போது ஒரேயொரு உறுப்புமாற்றுப் பெறுநருக்கு உதவமுடியும். மாறாக, இவ்வகையான தானம் பொருந்தக்கூடிய சிறுநீரக தானத் திட்டத்தின் மூலம் பலருக்கு உதவக்கூடும். இத்திட்டத்தின் மூலம் ஒரு (NDAD) இடமிருந்து கிடைக்கப்பெறும் ஒரு சிறுநீரக தானம் சங்கிலித்தொடராக தானம் செய்பவர்களிடையே மாற்றங்களைத் தொடக்கி வைக்க முடியும்.

உங்கள் மாகாணத்திலுள்ள ஓர் உயிருடன் இருப்பவர்கள் செய்யும் தானத்திட்டம் இந்த பொருந்தக்கூடிய சிறுநீரக தானத்திட்டம் பற்றிய மேலும் தகவல்களைத் தரமுடியும். இணையவழியாக நீங்கள் மேலும் தகவல்களை blood.ca/organs-tissues இலும் பெறமுடியும்.

**நான் எவ்வாறு ஆரம்பிக்க முடியும்?**

சிறுநீரக மாற்றுச்சிகிச்சைக்காகக் காத்திருக்கும் ஒருவரை உங்களுக்குத் தெரியுமானால், நீங்கள் அவர்களோடு கதைக்கலாம். அல்லது நீங்கள் உங்கள் மாகாணத்திலுள்ள ஓர் உயிருடன் இருப்பவர்கள் செய்யும் சிறுநீரக தானத் திட்டம் ஒன்றினைத் தொடர்பு கொள்ளலாம். நீங்கள் ஒருவருக்குக் குறிப்பாக வழிப்படுத்தப்படாத தானம் செய்பவராக விரும்பினால் உங்கள் மாகாணத்திலுள்ள ஓர் உயிருடன் இருப்பவர்கள் செய்யும் தானத்திட்டம் உங்களுக்கு மேலதிக தகவலைத் தரலாம். கனடாவிலுள்ள உயிருடன் இருப்பவர்கள் செய்யும் தானத்திட்டங்களின் தொடர்புகொள் தகவல்கள் blood.ca/organs-tissues.இல் இணையவழியாகக் கிடைக்கப்பெறுகின்றன.

*கனேடிய குருதிச் சேவைகள் ஒரு லாபநோக்கற்ற தர்ம ஸ்தாபனமாகும். கனடா சுகாதார பிரிவினால் உயிர்கூறுகளின் உற்பத்தியாளர்களாகக் கட்டுப்படுத்தப்பட்டு முக்கியமாக மாகாண மற்றும் எல்லைப்பிரதேச ஆரோக்கிய அமைச்சுகளினால் நிதிஉதவி செய்யப்பட்டும் வருகின்றன. இவர்கள் தேசியமயமான மட்டங்களுடன், உள்கட்டமைப்பு மற்றும் ஆட்சியதிகாரம் பெற்று செயல்படுவது கனேடிய ஆரோக்கிய பராமரிப்பில் தனித்துவமானதாகும். குருதி, குருதித்திரவம், குருத்தணுக்கலங்கள் போன்ற களத்தில் க்யூபெக் மாகாணத்தைத் தவிர்ந்த நோயாளிகளுக்கு எல்லா மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள் சார்பாகவும் நாம் சேவைகளை வழங்குகின்றோம். எமது முறைமைத்தொகுதியை மேம்படுத்துவதற்காக உறுப்புகளும் இழையங்களும் என்ற களத்தில் நாம் தேசிய காத்திருப்புப் பட்டியலையும் மாகாணங்களுக்கிடையேயான உறுப்புகள் பகிரும் பதிவேடுகளையும் நடத்துவதுடன் மாகாணத் திட்டங்களுடனும் கைகோர்த்துச் செயற்படுகின்றோம்.*

*www.blood.ca/organs-tissues*